
# தேவனுடைய மக்களை வேதாகமத்தை வாசிக்கச் செய்த மார்ட்டின் லூதர்

**ஜெபம்:** "அன்பான தேவனே, இலட்சக்கணக்கான விசுவாசிகளிடையே செய்யப்பட்ட மோசமான போதனையைத் திருத்தும்படி மார்ட்டின் லூதர் அறிவித்த மாபெரும் வேதாகம சத்தியங்களை சிறுவர்கள் தழுவிக்கொள்ள உதவுவீராக!"

பிசாசு கூறுகிறான்:




தேவ வார்த்தைக்குப் பதிலாக மனிதனின் சம்பிரதாயங்களை நாம் போதிக்கும் போது, நாம் சாத்தானை சந்தோஷப்படுத்துகிறோம்.

கிடைக்கும் நேரத்துக்கும், பிள்ளைகளின் வயதுக்கும் ஏற்ற செயல்பாடுகளை தேர்ந்தெடுக்கவும்.

**மாற்கு 7:1–13** லிருந்து இயேசு பரிசேயருக்குக் கூறிய கதையை ஒரு பெரிய பிள்ளையோ பெரியவரோ கூறட்டும்.

சிறுவர்களைக் கேளுங்கள்.

- பரிசேயர்கள் மதத் தலைவர்கள். தேவ கட்டளைக்கு மாறாக அவர்கள் எதை போதித்தனர்?
- மனித கட்டளைகளுக்குப் பதிலாக நாம் ஏன் வேதாகமத்தை போதிக்க வேண்டும்?

வேதாகமத்தைப் பெரிதும் போற்றிக் காத்த மார்ட்டின் லூதரின் கதையை **நாடகமாக்குக.**

- சபைத் தலைவரோடு பேசி பிள்ளைகள் நாடகத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்யவும்.
- கதையின் எல்லா பகுதிகளையும் நீங்கள் உபயோகிக்கத் தேவையில்லை.
- பெரிய பிள்ளைகள் சிறுவர்கள் ஆயத்தமாக உதவவும்.
- லூதர், உதவியாளர், அதிகாரி, கதை கூறுபவர் ஆகிய வேடங்களை **பெரியவர்களோ பெரிய பிள்ளைகளோ** ஏற்கலாம்.
- **சிறிய பிள்ளைகள்** குடியானவர்கள் போர்வீரர்கள் ஆகிய வேடங்களைத் தாங்கட்டும்.
- **கதை கூறுபவர்** தனக்குரிய பகுதிகளை வாசிக்கவும்.



**கதை கூறுபவர்:** "லூதர், ஜெர்மனியில் வாழ்ந்த ஒரு ரோமன் கத்தோலிக்கத் துறவி. அவரைப் பற்றி நாம் வரலாற்று புத்தகங்களில் படிக்கலாமே தவிர வேதாகமத்தில் படிக்க முடியாது. ஏனெனில் அவர் வாழ்வதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே வேதாகமம் எழுதப்பட்டுவிட்டது."

**குடியானவர்கள்:** குடிகாரர்களைப் போல தள்ளாடி நடக்கவும். சிலர் கீழே விழவும்.

**உதவியாளர்** (லூதரிடம்): "மார்டின் லூதரே! ஏதாவது செய்யுங்கள்! நீங்கள் எங்கள் போதகர். "டெட்சலின்" காரணமாக இந்த குடியானவர்கள் குடித்து விட்டு தாங்கள் விரும்பும் கெட்ட காரியங்களைச் செய்கின்றனர்."

**லூதர்** :(கோபத்துடன்) "யார் இந்த டெட்சல்?"

**உதவியாளர்:** "அவர் போப்புவிற்காக புனித பேதுரு தேவாலயத்தைக் கட்ட பணம் திரட்ட வந்தவர். அவர் மக்களிடம், தாராளமாகக் கொடுத்தால் அவர்கள் செய்யும் பாவத்தை சபை முற்றிலுமாக மன்னித்து விடும் என்று கூறுகிறார்."

**லூதர்:** "இல்லை! மக்கள் தங்கள் இரட்சிப்பைப் பணம் கொடுத்து வாங்க முடியாது. தேவ கிருபையும் மன்னிப்பும் பரலோகத்தில் இருந்து ரோமில் இருக்கும் போப்பின் வழியாக நமக்கு கீழே பாய்ந்து வராது. நான் எதிர்ப்பை எழுதி ஆலயக் கதவில் எல்லோரும் பார்க்கக் குத்தி வைக்கப் போகிறேன்!" (எழுதுவது போல் நடித்து காகிதத்தை குத்துகிறார்).

**உதவியாளர்:** காகிதத்தைப் பார்த்து விட்டு கூறுகிறார், "என்னால் இதன் ஒரு வார்த்தையையும் புரிந்து கொள்ள முடியவில்லை. இது லத்தின் மொழியில் எழுதப்பட்டுள்ளது."

**கதை கூறுபவர்:** "யாரோ ஒருவர் லூதரின் எதிர்ப்பை நகல் எடுத்து அச்சிட்டு விடுகிறார். நகல்கள் ஐரோப்பா முழுவதும் செல்லுகின்றன. பின்னர் ஒரு சபை அதிகாரி லூதரிடம் கூறுவதைக் கேளுங்கள்."

**அதிகாரி:** (லூதரிடம்) "ரோமில் இருக்கும் போப் மிகவும் கோபத்தில் உள்ளார். புனித ரோம சாம்ராஜ்யத்தின் பேரரசரும் நீங்கள் எழுதிய அனைத்தையும் மறுத்து, விட்டு விட கட்டளை இடுகிறார்."

**லூதர்:** "நான் எழுதிய அனைத்தும் வேதாகமத்தில் உள்ளதே. அதை என்னால் விட முடியாது!"

**அதிகாரி:** "அப்படியானால் போப் உம்மை சபையில் இருந்து நீக்கி விடுவார். மேலும் நீர் இதைத் தொடர்ந்தால் பேரரசர் உயிரோடு உம்மை எரித்து விடுவார்!"

**லூதர்:** "மாற்கு 7:6-9 ல் இயேசு கூறியதைக் கேளும்: 'அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக, இந்த ஜனங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகி இருக்கிறது என்றும், மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாக போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றும், எழுதி இருக்கிற பிரகாரம் மாயக்காரராகிய உங்களைக் குறித்து ஏசாயா நன்றாய்த் தீர்க்கதரிசனம் சொல்லி இருக்கிறான். நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளி விட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் கைக் கொண்டு வருகிறீர்கள்... நீங்கள் உங்கள் பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும் படிக்கு தேவனுடைய கட்டளையை வியர்த்தமாக்குகிறீர்கள்!"

**கதை கூறுபவர்:** "பேரரசர் அமர்ந்திருக்கும் ஒரு கூட்டத்திற்கு அதிகாரிகள் லூதரை பலவந்தமாய் வரும்படி செய்கின்றனர்."

**போர்வீரர்கள்:** லூதரை கையைப் பிடித்து அதிகாரியிடம் கொண்டு வருகின்றனர்.

**அதிகாரி:** "நீர் எழுதிய எல்லாவற்றிற்கும் எங்களிடம் நகல் இருக்கிறது. அவற்றை எல்லாம் இப்போதே நீர் மறுக்க வேண்டும்!"

**லூதர்** : "வேதத்திற்கு மாறான தவறை நீர் சுட்டிக்காட்டினாலே ஒழிய நான் சத்தியத்தை மறுக்க மாட்டேன். என் முடிவு இது தான். தேவன் எனக்கு உதவி செய்வார்!"

**போர் வீரர்கள்:** சத்தம் இடுதல். "கொல் அவனை" "உயிரோடு அவனை எரி" "அவன் நாக்கை அறு"

**கதை கூறுபவர்:** "இந்த விசாரணைக்குப் பின், லூதரின் நண்பர்கள் அவரை பேரரசர் கொல்ல முடியாதபடி ஓர் அரண்மனையில் மறைத்து வைக்கின்றனர்."

"அங்கு முதன் முதலாக அவர் வேதாகமத்தை ஜெர்மன் மொழியில் பெயர்க்கிறார்."

"பிற நாடுகளில் உள்ள விசுவாசிகளும் லூதரின் உதாரணத்தைப் பின்பற்றுகின்றனர். இயேசுவை விசுவாசிக்கிறவர்களை தேவன் அன்போடு காப்பார் என்று போதித்தனர்."

"இது பெரும்பான்மையான ஐரோப்பாவில் வேகமாக பரவியது. சுவிசேஷ இயக்கமும் பிறந்தது!"



**மனன வசனம் சங். 119:11.**

“நான் உமக்கு விரோதமாய்ப் பாவம் செய்யாதபடிக்கு உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்!”

பிள்ளைகள் இருதயத்துக்குள் வேதாகமம் இருப்பது போல் ஒரு **படத்தை வரையவும்.** அதை ஆராதனை வேளையின் போது பெரியவர்களுக்குக் காட்டி, இருதய பூர்வமாக படிப்பதே தேவ வார்த்தையைக் காத்துக் கொள்ளும் வழி என்று போதிக்கவும்.

**சங்கீதம்: 119: 9-11** ஐ மூன்று சிறுவர்கள் ஒப்புவிக்கவும்.

வாலிபன் தன் வழியை எதனால் சுத்தம் பண்ணுவான். உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதனால் தானே?

என் முழு இருதயத்தோடும் உம்மைத் தேடுகிறேன். என்னை உமது கற்பனைகளை விட்டு வழிதப்ப விடாதேயும்.

நான் உமக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடிக்கு உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்.

**மாற்கு 7:1-23** ல் உள்ள, பரிசேயர்களிடம் இயேசு நடத்திய உரையாடலை மையமாக வைத்து பெரிய பிள்ளைகள் கவிதை, பாடல் அல்லது நாடகம் எழுதலாம். இதில் இயேசு தேவ கட்டளைக்கு கீழ்ப்படிவது பற்றியும், நமது வாயில் இருந்து வரும் வார்த்தைகள் தூய்மையாய் இருக்கும்படி காத்துக் கொள்வது பற்றியும் பேசினார்.

**ஜெபம்:** “அன்பான கர்த்தாவே. மார்ட்டின் லூதரையும் அவரைப் போன்றோரையும் போல தைரியமாய் இருக்க எங்களுக்கு உதவும். நீர் எங்களை நேசித்த படியால் எங்களை இரட்சித்தீர் என்பதையும், எங்கள் சொந்த கிரியைகளினால் பரலோகத்துக்கு சொந்த வழியை தெரிந்து கொள்ளவில்லை என்பதையும் அவர்கள் போதித்தனர்.”

Copyright 2005 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net